08.11.2023 அ.வ. எண். 412/2019 வா.சா.1 தமிழரசி

குறுக்கு விசாரணை

வாதிகளாகிய நாங்களும், 1ம் பிரதிவாதியின் கணவரும், இறந்துபோன கோபாலின் வாரிசுகள். 1ம் பிரதிவாதி தமிழ்மணியின் மனைவி. முதல் விசாரணையில் 1ம் பிரதிவாதி கோபால் மனைவி என சொல்லியுள்ளது தவறு. என் தகப்பனார் எந்தவித ஆவணங்களும் எழுதிவைக்காமல் 1970 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவின் சொத்துக்கள் உள்ளது. எங்களுக்கும், இறந்துபோன தமிழ்மணிக்கும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் உள்ளது. பாகம் கோரி தான் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என் தகப்பனார் சொத்துக்களை வழக்கில் சேர்க்காமல் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தை பொறுத்து மட்டும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் தாவா சொத்தை கஷ்டப்பட்டு நாங்கள் வாங்கியது. என் தம்பி சொன்னால் நெருப்பில் கூட குதித்துவிடுவோம் என்பதற்கு ஆதாரம் இல்லை. தமிழ்மணி இறந்துவிட்டார். குடும்ப சொத்துக்களில் 1ம் பிரதிவாதி பாகம் கேட்டுவிடுவார் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என் தம்பி இராணுவத்தில் 45 ஆண்டுகள் பணிபுரிந்தார். என் தம்பி எந்த காலத்திலும் எங்களுடன் சேர்ந்து கூட்டுக்குடும்பமாக வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி கூட்டுக்குடும்பத்தில் கா்த்தாவாக இருந்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளது. என் தம்பி மீது கண்மூடித்தனமாக நம்பிக்கை வைத்திருந்ததாக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை விற்கப்போவதாக கோபி, சரஸ்வதி 3ம் வாதியிடம் எப்போது சொன்னார்கள் என்று சொன்னால் 2005 ஆம் ஆண்டு தான் சொன்னார்கள். அவ்வாறு வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. கோபி, சரஸ்வதி ஆகியோர்களிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். மேற்சொன்ன கிரையத்திற்கான கிரையத்தொகை ரூ.6,00,000/-இல் ரூ.2,00,000/- நானும், ரூ.1,00,000/- 2ம் வாதியும் கிரையத்திற்காக தொகை கொடுத்தோம் என்பதற்கு ஆதாரம் இல்லை, தம்பி என்பதால் கொடுத்தோம். கிரைய ஆவணத்தை வழக்கில் தாக்கல்

செய்யவில்லை. கிரைய ஆவணங்களில் கிரையத்தொகை நாங்கள் செலுத்தியதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் என் தம்பியிடம் கொடுத்தோம். கிரைய ஆவணங்கள் ஏற்பட்டபோது நான் ஊத்தங்கரையில் இருந்ததற்கும், 2ம் வாதி ஓட்டுநராக வெளியூரில் இருந்ததற்கும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது உண்மை தான். இறந்துபோன என் தம்பி தமிழ்மணியின் அறிவுறுத்திலின் பேரில் 1ம் பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணம் எழுதப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பணம் கொடுத்துள்ளோம். குடும்ப சொத்துக்களை பாகம் பிரிக்கும்போது தாவா சொத்துக்களிலும் பாகம் கொடுப்பதாக என் தம்பி சொன்னார் என்பதற்கு ஆவணம் இல்லை வாய்மொழியாக சொன்னது தான். என் தம்பி அவ்வாறு சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்படவில்லை. குடும்ப சொத்துக்களை வழக்கில் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் செங்கல் சூளை இருந்தது, அவர்கள் மண் போட்டு சமன் செய்துவிட்டார்கள். செங்கல் சூளை நடத்த அரசாங்கத்தில் அனுமதி பெறவேண்டும். 1ம் பிரதிவாதி தான் அரசாங்கத்தில் அனுமதி பெற்று 1ம் பிரதிவாதி தான் செங்கல் சூளை நடத்திவந்தார் என்றால் நிலம் அவர் பெயரில் இருந்ததால் செங்கல் சூளை நடத்த அனுமதி பெறப்பட்டது. செங்கல் சூளைக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், 1ம் பிரதிவாதி தான் அரசாங்கத்தில் அனுமதி பெற்று செங்கல் சூளை நடத்திவந்தார் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் வேலைக்கு இருந்துவந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அதில் நாங்கள் பாகம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தமிழ்மணிக்கே பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றும், 1ம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து குறித்து ஏற்பாடு

செய்யும் உரிமை தமிழ்மணிக்கே இல்லை என்றால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கடைசியில் பிரதிவாதிகள் வந்து செங்கல் சூளைக்காக சேமித்து வைத்திருந்த மண்ணை அப்புறப்படுத்தவேண்டும் என்று மிரட்டியதாக தவறாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் எங்களிடம் சொல்லவில்லை. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்பதால் 1ம் பிரதிவாதியிடமிருந்து 2 முதல் 6 பிரதிவாதிகள் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. கோபி, சரஸ்வதி இருவரிடமிருந்து 1ம் பிரதிவாதி 14.07.2005 ஆம் தேதி இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியிடமிருந்து 10.06.2019 ஆம் தேதி 2 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் தெரியாது. 1ம் பிரதிவாதியிடமிருந்து 2 முதல் 6 பிரதிவாதிகள் சுவாதீனம் பெற்று அனுபவித்து வருவதால் தாவா சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றும், 1ம் பிரதிவாதியிடமிருந்து அனுமதி பெற்று செங்கல் சூளை நடத்திவந்த உரிமையும் தற்போது இல்லை என்றால் சரியல்ல. செங்கல் சூளையின் உரிமையாளர் 1ம் பிரதிவாதி என்பதால் எங்களுக்கு பல இலட்சம் நஷ்டம் ஏற்படும் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பணபலம், படைபலம் மிக்கவர்கள் என்று வழக்கிற்காக தவறாக சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. பெண்கள் சொத்துரிமை சட்டத்தின்படி பெண் பெயரில் பெறப்பட்ட கிரையம் அந்த பெண்ணிற்கு மட்டும் தான் உரிமை என்றும், அவர் கணவருக்கு கூட உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆதலால் வழக்கில் கோரியுள்ளவாறு பாகப்பிரிவினை எங்களுக்கு அளிக்கத்தக்கல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்துள்ள கிரையம் சட்டப்படி செல்லும் என்பதால் நாங்கள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி

தாவா சொத்தை கிரையம் பெற்றபிறகு ஆழ்துளை கிணறு அமைத்து செங்கல் சூளை நடத்திவந்தார் என்றால் சரியல்ல. கிணறு நாங்கள் அமைத்தது. தாவா சொத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கான மின் இணைப்பு 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் அவர் பெயரில் நாங்கள் வாங்கியது. அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுதான் ஆதாரம். தாவா சொத்திற்கான வரியை 1ம் பிரதிவாதி ஆன்லைன் மூலமாகவும், நேரடியாகவும் செலுத்தியுள்ளார் என்றால் நாங்கள் தான் செலுத்தியுள்ளோம். மின் கட்டண ரசீது, தீர்வை ரசீது ஆகியவைகளை தாக்கல் செய்துள்ளோமா என்றால் வீட்டில் இருந்தால் தாக்கல் செய்கிறேன். 1ம் பிரதிவாதி பெயரில் கிரைய ஆவணம் ஏற்பட்டபிறகு பட்டா 1ம் பிரதிவாதி பெயருக்கு மாறிவிட்டது என்றால் 3ம் வாதி தான் பேசி கிரையம் வாங்கினார். அதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் பெற்றபிறகு தாவா சொத்திற்கான அ பதிவேடு 2 முதல்6 பிரதிவாதிகள் பெயரில் தான் வருகிறது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்தபிறகு அவர் சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. குடும்ப சொத்துக்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின் படி பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவருடைய சொந்த பணத்தைக்கொண்டு கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. நாங்களும் பணம் கொடுத்தோம். கிரையத்திற்காக நாங்கள் எந்த தொகையும் கொடுக்கவில்லை என்பதால் கிரைய ஆவணத்தில் எங்கள் பெயர் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடமிருந்து பணம் பெறுவதற்காக தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.